# சத்தியமங்கலம் நகராட்சி

**2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 28.11.2022 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர் மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 10.11.2022 ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி சொத்துவரி சீராய்வு 2022–23 ம் ஆண்டு வசூல் சொத்துவரி 3% , காலியிட வரி 19% , தொழில்வரி 19% மற்றும் குடிநீர் கட்டணம் 6% வசூல் சதவீதம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. ஆகையால் சத்தியமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளுக்கும் ஆட்டோ மூலம் பொது மக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்ய ஆகும் செலவினம் தோராயமாக ரூ. 30,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அவரச அவசியம் கருதி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந. க.எண். 626/2022/அ1)

**தீர்மானம் எண் : 215 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 2**

சத்தியமங்கலம் நகராட்சியின் 2021–2022 ஆம் ஆண்டு கணக்குகள் CWBS மென்பொருள் வழியே வருவாய் நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி ஆகிய கணக்குகள் முடிக்கப்பட்டு, உதவி இயக்குநர், உள்ளாட்சித் தணிக்கைத்துறை, ஈரோடு அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

2021–2022 ஆம் ஆண்டு கணக்குகள் இறுதி செய்தல் மற்றும் இதற்குரிய இணைப்பு அறிக்கைகள் தயாரித்தல் ஆகிய பணிகளை கன்சல்டண்ட் மூலம் தயார் செய்து முடித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை, ஈரோடு அவர்களுக்கு உரிய காலத்தில் சமர்ப்பிக்கும் பணிகளை செய்து முடித்த திரு.A.V.ஸ்ரீதர், த.பெ.A.வைரவேல், திருச்செங்கோடு அவர்களுக்கு கட்டணம் ரூ.75,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 277/2019/பி1)

**தீர்மானம் எண் : 216 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 3

சத்தியமங்கலம் நகராட்சியின் கச்சேரி வீதி சத்திரம் வளாகத்தில் காலியாக உள்ள அரசாணை எண்.92 ன்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 16.11.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | கடை எண். | இனம் | ஏலதாரரின் பெயர் | பழைய மாத வாடகை | சந்தை மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1 | 19 | கச்சேரி வீதி சத்திரக் கடை | ஷேக் அப்துல் காதர், த/பெ. நூருல்லா, ராஜீவ் நகர், அத்தாணி ரோடு, சத்தியமங்கலம். | 17,500/- | 3,320/- |
| 2 | 19 | கச்சேரி வீதி சத்திரக் கடை | ஸ்ரீதரன், த/பெ. ஐயப்பன், ரங்கசமுத்திரம் சந்து எண். 2. சத்தியமங்கலம். | 17,500/- | 3,320/- |

| வழிகாட்டி மதிப்பு (PWD) | குழு நிர்ணயம் | உயர்ந்தபட்சமாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை | உரிமம் காலம் | பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி எத்தனை முறை ஏலம் |
|---|---|---|---|---|
| 7. | 8. | 9. | 10. | 11. |
| 4,620/- | 6,000/- | 9,500/- | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு | 5-வது முறை |
| 4,620/- | 6,000/- | 7,100/- | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு | 5-வது முறை |

அலுவலகக் குறிப்பு :

மேற்க்கண்ட கடை 5 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன் வரவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. இதில், 16.11.2022 அன்று ஷேக்

அப்துல் காதர், த/பெ.நூருல்லா, ராஜீவ் நகர், அத்தாணி ரோடு, சத்தியமங்கலம்.என்பவர் ரூ.9,500/– பழைய மாத வாடகை காட்டிலும் குறைவாகவும் சந்தை மதிப்பு, வழிகாட்டி மதிப்பு (PWD) குழு நிர்ணயம் மாத வாடகை காட்டிலும் அதிகமாக கேட்டுள்ளார். எனவே, மேற்காணும் இனம் நீண்ட நாட்களாக வாடகைக்கு ஒருவரும் எடுக்காததால் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு மாத வாடகை ரூ.9,500/– உறுதி செய்திட மன்ற தலைவரின் முன் ஒப்புதல் பெற்று 01.12.2022 முதல் உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண். 1200/2022/அ3)

**தீர்மானம் எண் : 217 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 4**

சத்தியமங்கலம் நகராட்சியின் பழைய பேருந்து நிலைய காலியாக உள்ள கடைகள் அரசாணை எண். 92 ன்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 16.11.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | கடை எண். | இனம் | ஏலதாரரின் பெயர் | பழைய மாத வாடகை | சந்தை மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1 | 5 | பழைய பேருந்து நிலையக் கடை | மாணிக்கம், த/பெ. முத்துசாமி, கொமரபாளையம், சத்தியமங்கலம். | 9,315/– | 5,570/– |

| வழிகாட்டி மதிப்பு (PWD) | குழு நிர்ணயம் | உயர்ந்தபட்சமாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை | உரிமம் காலம் | பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி எத்தனை முறை ஏலம் |
|---|---|---|---|---|
| 7. | 8. | 9. | 10. | 11. |
| 7,150/– | 9,000/– | 6,000/– | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு | 6–வது முறை |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட கடை 6 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன் வரவில்லை. ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் 16.11.2022 அன்று மாணிக்கம், த/பெ.முத்துசாமி, கொமரபாளையம், சத்தியமங்கலம் என்பவர் ரூ.6,000/– வழிகாட்டி மதிப்பு (PWD) காட்டிலும் குறைவாகவும் (ம) பழைய மாத வாடகை, சந்தை மதிப்பை, குழு நிர்ணயம் மாத வாடகை காட்டிலும் அதிகமாக கேட்டுள்ளார். எனவே, மேற்காணும் இனம் நீண்ட நாட்களாக வாடகைக்கு ஒருவரும் எடுக்காததால் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு மாத வாடகை ரூ.6,000/– உறுதி செய்திட மன்ற தலைவரின் முன் ஒப்புதல் பெற்று 01.12.2022 முதல் உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண். 1200/2022/அ3)

**தீர்மானம் எண் : 218 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 5**

சத்தியமங்கலம் நகராட்சியின் கச்சேரி வீதி சத்திரம் வளாகத்தில் காலியாக உள்ள கடைகள் அரசாணை எண். 92 ன்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 16.11.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | கடை எண். | இனம் | ஏலதாரரின் பெயர் | பழைய மாத வாடகை | சந்தை மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1 | 9A | கச்சேரி வீதி சத்திரக் கடை | சௌ.பன்னீர் செல்வம், த/பெ. சௌந்தரராஜன், மைசூர் டிரங்ரோடு, சத்தி | 23,000/– | 15,680/– |

| வழிகாட்டி மதிப்பு (PWD) | குழு நிர்ணயம் | உயர்ந்தபட்சமாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை | உரிமம் காலம் | பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி எத்தனை முறை ஏலம் |
|---|---|---|---|---|
| 7. | 8. | 9. | 10. | 11. |
| 22,376/– | 6,000/– | 23,100/– | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு | 5வது முறை |

அலுவலகக் குறிப்பு :

மேற்க்கண்ட கடை 5 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன் வரவில்லை. ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் 16.11.2022 அன்று சௌ.பன்னீர் செல்வம், த/பெ. சௌந்தர ராஜன், மைசூர் டிரங்ரோடு, சத்தியமங்கலம் என்பவர் ரூ. 23,100/– வழிகாட்டி மதிப்பு (PWD) காட்டிலும் குறைவாகவும் (ம) பழைய மாத வாடகை, சந்தை மதிப்பை, குழு நிர்ணயம் மாத வாடகை காட்டிலும் அதிகமாக கேட்டுள்ளார். எனவே, மேற்காணும் இனம் நீண்ட நாட்களாக வாடகைக்கு ஒருவரும் எடுக்காததால் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு மாத வாடகை ரூ. 23,100/– உறுதி செய்திட மன்ற தலைவரின் முன் ஒப்புதல் பெற்று 01.12.2022 முதல் உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண். 1200/2022/அ3)

**தீர்மானம் எண் : 219 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 6**

இந்நகர் மன்ற தீர்மானம் எண்.126 நாள்.29.07.2022 இன்படி சத்தி – அத்தாணி சாலையில் அமைந்துள்ள தினசரி மார்க்கெட் இடிக்கப்பட்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதியதாக தினசரி மார்க்கெட் மேம்பாடு பணி நடைபெற்று வருகிறது. இந்த வளாகத்தில் ஏற்கனவே உள்ள கட்டிடம் இடிக்கும் போது பயன்படுத்த முடியாமல் உள்ள இரும்பு ஆங்கிள், இரும்பு கம்பிகள், மர கட்டைகள் தலைமை நீரேற்று நிலையத்தில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பொருள்கள் ஏலம் கோர மன்ற அனுமதி வழங்கப்பட்டது.எனவே, 08.11.2022 அன்று ஏலம் கோரப்பட்டதில் அதிகபட்சமான தொகை ரூ.99,250–/–ஐ திரு.எஸ்.ஆர்.மூர்த்தி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் அவர்களின் ஏலம் அங்கீகரிக்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அதிகபட்ச ஏலத்தொகை கோரிய திரு.எஸ்.ஆர்.மூர்த்தி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் அவர்களின் ஏலத்தினை அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.796/2021/இ1

**தீர்மானம் எண் : 220 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 7

இந்நகர் மன்ற தீர்மானம் எண்.181 நாள்,30.09.2022 இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட அம்மா உணவகத்தில் சமையல் செய்யும் இந்திரங்கள் பழுது சரி செய்தல் மற்றும் கட்டிட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது, 15.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன, ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது,

| வ,எண், | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Thiru.R.Arumugam,Contractor Sathyamangalam | ரூ.166859.84 | 0.41 சதவீதிம் குறைவு |
| 2 | M/s.Vino Constructions, Contractor Bhavani Sagar | ரூ.168722.34 | 0.70 சதவீதிம் அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.R.Arumugam Contractor Sathyamangalam அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.R.Arumugam, Contractor, Sathyamangalam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளப்பட்டு பணி ஆணை வழங்கலாம்.

ந.க.எண்.548/2022/இ1

தீர்மானம் எண் : 221 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. **நாள்** 28.11.22

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.9 துரைசாமி வழக்கறிஞர் வீடு வீதியில் மற்றும் கட்டபொம்மன் நகர் பகுதியில் குடிநீர் குழாய் இல்லாததால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இப்பகுதியில் சுமார் 10 முதல் 25 குடும்பங்கள் உள்ளன. இந்த குடும்பங்களுக்கு குடிநீர் வசதி இல்லாமல் நீண்ட தொலைவில் சென்று குடிநீர் எடுத்து வருகிறார்கள். எனவே, ஏற்கனவே, உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஆகும் என்று வார்டு

உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 222 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 9**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட குள்ளங்கரடு பகுதியில் சுமார் 300 முதல் 400 மக்கள் தொகை வசித்து வருகிறார்கள். இப்பகுதி பொதுமக்கள் அதிகளவில் வெளியூர்களுக்கு கூலி வேலைக்கு சென்று வருகிறார்கள். இவர்களுக்கு குடிநீருக்கு கடும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.குடிநீர் அவசியத்தினை கருத்தில் கொண்டு புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து நான்கு வீதிகளுக்கு பகிர்மான குழாய்கள் அமைத்து தர கோரி அப்பகுதி பொதுமக்கள் அடிக்கடி புகார் தெரிவித்து வருகிறார்கள் என்று வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி குள்ளங்கரடு பகுதியில் புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 223 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 10**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே3 நாள்.04.12.2018 இன்படி சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 1,2,17 முதல் வார்டுகள் 22 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி ஒப்படைப்பு செய்து 50 ஒப்பந்த பணியாளர்கள் தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற அடிப்படையில் 01.04.2021 முதல் 30.11.2022 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடையும் நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட கருத்துரு நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள 50 ஒப்பந்த பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.12.2022 முதல் 31.12.2022 வரையிலான ஒரு மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.12.2022 முதல் 31.12.2022 வரையிலான ஒரு மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.7,87,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந. க. எண். 137/2020/எச்.1)

**தீர்மானம் எண் : 224 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 11**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே 3 நாள்.04.12.2018 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 11,12,23 முதல் வார்டுகள் 27 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி நீட்டிப்பு செய்து 55 ஒப்பந்த பணியாளர்கள் மூலம் துாய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற முறையில் 01.04.2021 முதல் 30.11.2022 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடைந்த நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட கருத்துரு நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள 55 ஒப்பந்த பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.12.2022 முதல் 31.12.2022 வரையிலான ஒரு மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.12.2022 முதல் 31.12.2022 வரையிலான ஒரு மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும்.

அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,65,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக்குறிப்பு : - | 1<br>2 | பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந. க. எண். 1305/2019/எச். 1) |

**தீர்மானம் எண் : 225 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 12**

பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண். TN36AM5808 மற்றும் TN36AM5877 க்கு பழுதுகள் மற்றும் பராமரிப்பு சரி செய்யும் பணிக்கு 10.11.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர்ஸ் ஒர்க்ஸ் | 1,49,700/– |
| 2 | முருகன் ஆட்டோஸ் | 1,57,200/– |

மேலும், மேற்கண்ட பணிக்கு நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :**

குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ் ஒர்க்ஸ் என்னும் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 567/2022/எச். 1)

**தீர்மானம் எண் : 226 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 13**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பராமரிப்பிலுள்ள பள்ளியில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பு செய்திட தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை நியமிக்க அரசாணை எண். G.O.(MS) No. 166 நாள். 23.11.2016 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை) இன்படி அரசாணை

வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி சத்தியமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் விபரப்படி பள்ளிகள் உள்ளன.

| வ.எண் | பள்ளி விபரம் | பணி யாளர் |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ரங்கசமுத்திரம் | 2 |
| 2 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ரங்கசமுத்திரம் | 3 |
| 3 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ஆர். எம்.பி. நகர் | 2 |
| 4 | நகராட்சி நடுநிலைப் பள்ளி, சத்தியமங்கலம் | 3 |
| 5 | நகராட்சி துவக்கப்பள்ளி, கொளத்துார் | 2 |
| 6 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி | 4 |
| | **மொத்தம்** | **16** |

இவ்வலுவலக ந.க.எண். 650/2019/எச்.1 நாள். 30.06.2019 இன்படி 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் பள்ளிக்கழிப்பறைகள் துாய்மையாக பராமரித்தல் பணியினை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு தற்பொது 30.06.2020 உடன் மேற்படி பணியின் காலம் நிறைவு பெறுவதால், மீண்டும் 01.07.2020 முதல் 30.06.2021 வரையில் ஓராண்டு காலத்திற்கு மேற்காணும் 6 பள்ளிகளுக்கு 16 பணியாளர்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலியமான முறையில் பணி பார்க்கப்பட்டு பழைய ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வந்தனர்.

மேலும் கொரோனா கட்டுப்பாடுகள் அமலில் இருந்ததால் 01.07.2021 வரை பள்ளிகள் திறக்கப்படவில்லை. எனவே பள்ளி துாய்மை பணி செய்யும் பணியாளர்கள் (School Toilet) பணி உத்திரவு தற்காலியமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

தற்போது மீண்டும் கொரோனா கட்டுப்பாட்டு தளர்வுகள் செய்யப்பட்டதின் கீழ் பள்ளிகள் திறக்கப்பட்டதின் பொருட்டு 16 ஒப்பந்த பணியாளர்களுக்கான ஒப்பந்தக்காலத்தினை 01.05.2022 முதல் 30.11.2022 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே மேலும் 01.12.2022 முதல் 31.12.2022 வரை ஒரு மாதகாலத்திற்கு ஏற்கனவே துாய்மை பணிகளை மேற்கொண்டு வந்த V.B.N. பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.12.2022 முதல் 31.12.2022 வரையிலான ஒரு மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2,52,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1. பள்ளி மாணவ மாணவியரின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை பள்ளிக்கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந. க. எண். 541/2020/எச். 1)

**தீர்மானம் எண் : 227 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 14**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் ABC –Animal Birth Control Programme என்ற நாய்கள் இனப்பெருக்கத்தை தடை செய்யும் வகையில் WVS Worldwide Vetrinary Service என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் நகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் ARV வெறி நாய்கடி தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட இந்த நிறுவனமானது ஊட்டியை மையமாக கொண்டு செயல்பட்டு வருவதினால் நகராட்சிப் பகுதிகளில் திடீர் என ஏற்படும் தெரு நாய்கள் பற்றி புகார்களை உடனடியாக சரி செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட புகார்களை சரி செய்திட நாய்களை பிடிப்பதற்கான வலைகள் மற்றும் அதற்குரிய உபகரணங்கள் கீழ்க்கண்டவாறு வாங்கிட 1) Dog Catching Net with Frame 2) Grasper with Rope 3) Spare Net 4) Spare Rope ஆகியவைகளை பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.20,000/– மன்றத்தின் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 580/2022/எச்.1)

**தீர்மானம் எண் : 228 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 15**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட சத்தி –1 நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பழைய கட்டிடம் கட்டப்பட்டு 50 வருடங்களுக்கு மேலாகி விட்டதாலும், பள்ளி மாணவர்கள் அதிக அளவில்

வகுப்புகளுக்கு வந்து பாடங்கள் பயின்று வருகிறார்கள். இதனால் மாணவர்கள் பாடம் படிக்க போதுமான இட வசதி இல்லை, மேலும் காற்று ஓட்டமாக வகுப்பு அறைகள் இல்லாததால் கூடுதலாக வகுப்பறைகள் முதல் மாடி உட்பட நான்கு வகுப்பறைகள் கட்டி தருமாறு தலைமை ஆசிரியர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள், எனவே, பள்ளி மாணவர்களின் நலன் கருத்தில் கொண்டு கூடுதல் கட்டிடம் கட்ட உத்தேச செலவினம் ரூ.35.00 இலட்சத்திற்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.204 நாள்.31.10.2022–ஐ இரத்து செய்யவும், தலைமை ஆசிரியர் அவர்களின் கோரிக்கையின்படி கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுவதால் மதிப்பீடு ரூ.57.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 229 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 16**

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு வைரஸ் ஒழிக்கும் மென்பொருள் இல்லாததால் கணிணி விரைவாக உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் அலுவலக பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை சரி செய்யும் பொருட்டு புதியதாக வைரஸ் ஒழிக்கும் மென்பொருள் (ANTI VIRUS SOFTWARE ) 1User 1 Year Pack -35 Pack வாங்க உத்தேச செலவின தொகை ரூ.91,000/- ஆகும். இச்செலவின தொகை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.77/2022/இ1)

**தீர்மானம் எண் : 230 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 17**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.26 திருநகர் காலனியில் போதிய குடிநீர் வசதிகள் இல்லாததால் அப்பகுதி பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இதனால் பொதுமக்கள் தண்ணீருக்கு நீண்ட தூரத்திற்கு சென்று வருகிறார்கள். பொதுமக்களின் நலன் கருத்தில் கொண்டு

ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குழாய் விஸ்தரிப்பு செய்து தருமாறு வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். பொதுமக்களின் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் குழாய் விஸ்தரிப்பு செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 231 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 18**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.4 உருமையன் வீதியில் உள்ள சிமெண்ட் சாலை வடக்கு கிழக்கு பருவ மழையால் சிமெண்ட் சாலை அதிகளவில் சேதம் ஏற்பட்டு சாலை குண்டு குழியுமாக உள்ளது. இதனால் சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகிறது என்று அப்பகுதி பொதுமக்கள் புகார்கள் தெரிவித்து வருகிறார்கள் என்று வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளர்கள். எனவே, மழை காலம் என்பதால் சிமெண்ட் சாலை பழுது பார்க்க உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்,548/2022/இ1)

**தீர்மானம் எண் : 232 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 19**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ஆர்.எம்.பி.நகர் துவக்கப்பள்ளியில் மழை காலங்களில் பள்ளி வளாகத்திற்குகள் மழை நீர் தேங்கி பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவிகள் சேற்றில் விளையாடி கொண்டு வகுப்பறைகளுக்குள் செல்கிறார்கள். மாணவர்களுக்கு அடிக்கடி உடல் உபாதைகள் ஏற்படுகிறது. இதனை தடுக்கும் பொருட்டு பள்ளி வளாகத்தின் சுற்றியும் பேவர் பிளாக் அமைத்து மற்றும் பள்ளியில் வளாகத்தில் பராமரிப்பு பணிகள் செய்து தருமாறு தலைமை ஆசிரியர் அவர்களின் கடிதத்தில்

தெரிவித்துள்ளார்கள். எனவே, பள்ளி மாணவர்கள் நலன் கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்,548/2022/இ1)

**தீர்மானம் எண் : 233 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 20**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் துவக்கப்பள்ளியில் மழை காலங்களில் பள்ளி வளாகத்திற்குகள் மழை நீர் தேங்கி பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவிகள் சேற்றில் விளையாடி கொண்டு வகுப்பறைகளுக்குள் செல்கிறார்கள்.மாணவர்களுக்கு அடிக்கடி உடல் உபாதைகள் ஏற்படுகிறது. இதனை தடுக்கும் பொருட்டு பள்ளி வளாகத்தின் சுற்றியும் பேவர் பிளாக் அமைத்து, மற்றும் பள்ளியில் வளாகத்தில் பராமரிப்பு பணிகள் செய்து தருமாறு தலைமை ஆசிரியர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள், எனவே, பள்ளி மாணவர்கள் நலன் கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (கட்டு எண்,548/2022/இ1)

**தீர்மானம் எண் : 234 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 21**

நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.24608/2022/இஏ2 நாள்.21.10.2022 இல் தெரிவித்துள்ள வழிமுறைகளின் படி சத்தியமங்கலம் நகராட்சியில் 27 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளான நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் பேட்டரி வாகனங்கள், இலகு ரக வாகனங்கள் (LCV) மற்றும் கனரக வாகனங்கள் (HCV) மூலம் முதல் நிலை சேகரித்தல் பணி மேற்கொள்ளவும், பேருந்து செல்லும் முக்கிய சாலைகள்,சாதாரண சாலைகள் மற்றும் தெருக்களில் தூய்மைப்பணி மேற்கொள்ளுதல் மற்றும் சாலைகளில் முட்புதர்களை அகற்றுதல் மற்றும் பேருந்து நிலையம் பராமரித்தல் மற்றும் தினசரி சந்தை மற்றும் வாரச்சந்தை ஆகிய பகுதிகளில் திடக்கழிவுகள் அகற்றுதல் மற்றும் நகராட்சிப்பகுதியிலுள்ள கழிவு நீர் கால்வாய்களை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை தனியார் வசம் ஒப்படை செய்து மேற்கொள்ளும் பணிக்கு கணக்கீடு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் தேவைப்படுகின்றன.

| வரிசை எண் | பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தூய்மைப்பணியாளர்கள் | 165 பணியாளர்கள் |
| 2 | தூய்மைப்பணி மேற்பார்வையாளர்கள் | 8 பணியாளர்கள் |
| 3 | ஓட்டுநர்கள் | 21 பணியாளர்கள் |
| 4 | பேட்டரியால் இயக்கப்படும் வாகனங்கள் | 11 எண்ணிக்கை |
| 5 | இலகு ரக வாகனங்கள் | 6 எண்ணிக்கை |
| 6 | கன ரக வாகனங்கள் | 10 எண்ணிக்கை |
| 7 | தள்ளு வண்டிகள் | 14 எண்ணிக்கை |

மேற்கண்டவாறு கணக்கீட்டின் படி பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் ஒப்பந்த முறையில் அளித்திட ஒரு வருடத்திற்கு உத்தேசமாக ரூ.4,20,00,000/- செலவினம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
மேற்கண்ட பணிகளுக்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாளர்களை தேர்வு செய்யவும், மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவினத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பிட நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக்கட்டணம் நிதியிலிருந்தும்,வருவாய் நிதியிலிருந்தும் மற்றும் 15 வது நிதிக்குழு மான்ய நிதியிலிருந்தும் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
3) பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்காலம்.

(ந. க. எண். 2223/2022/எச். 1)

**தீர்மானம் எண் : 235 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

**பொருள் : 22**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.12 சத்தி –1 நகராட்சி நடுநிலைப்பள்ளி வீதியில் உள்ள சிமெண்ட் சாலை மழையால் சேதம் ஏற்பட்டு சாலை குண்டு குழியுமாக உள்ளது.இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும், இச்சாலையில் செல்லும் போது அடிக்கடி சிறு விபத்துகள் ஏற்பட்டு வருகிறது. இச்சாலையை செப்பனிட்டு பராமரிக்கப்பட வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளதாக வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பணிக்கு உத்தேச

செலவினம் ரூ.1.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 236 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 23

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.3 தேங்கள் மாரியம்மன் கோவில் சாலையில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து சின்டெக்ஸ் டேங்கில் இருந்து செல்லும் பைப்லைன் உடைந்து தண்ணீர் வீணாகி செல்கிறது. இதனால் அங்கு இருக்கும் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்று வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இதனை சரி செய்யும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.0.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 237 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 24

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட திப்புசுல்தான் ரோடு, நிர்மலா தியேட்டர், சத்தியா தியேட்டர் ரோடு ஆகிய கனரக வாகனங்கள் செல்லும் சாலையில் அடிக்கடி சாலை பழுது ஏற்பட்டு குண்டு குழியுமாக உள்ளது. இச்சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இச்சாலையில் உள்ள குண்டு குழியில் வாகனங்கள் சிக்கி விடுகிறது. இதனை சரி செய்யும் பொருட்டு கான்கிரீட் பேட்ச் மற்றும் தார் பேட்ச் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் ஆகும். இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 238 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 25

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.23 பேருந்து நிலையம் செல்லும் சாலை மற்றும் கரட்டூர் ரோடு பகுதியில் ஏற்கனவே உள்ள மழை நீர் வடிகால் பழுது ஏற்பட்டு கழிவு நீர் கசிந்து சாலையில் செல்கிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். மேலும், தேங்கி நிற்கும் கழிவு நீரால் கொசு தொல்லை ஏற்படுவதாக அப்பகுதி பொதுமக்கள் அடிக்கடி புகார்கள் அளித்த வண்ணம் உள்ளார்கள். இதனை சரி செய்யும் பொருட்டு மழை நீர் வடிகால் பழுது பார்க்க உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 239 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 26

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட லட்சுமி நகர் பூங்காவில் மேம்பாடு பணிகள் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பேவர் பிளாக் பணிகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டன .இப்பூங்காவில் கழிவறை,குடிநீர்,நடைபாதை வசதிகள் இல்லாததால் அங்கு இருக்கும் குடியிருப்பு வாசிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனவே, இப்பொருள் மீது சிறப்பினமாக கருதியும் பொதுமக்கள் லட்சுமி நகர் பூங்கா அவர்களின் கோரிக்கை நிவர்த்தி செய்யவும்,புதிதாக ஆழ்குழாய் கிணறு,கழிவறை அமைக்கவும் மற்றும் இதர பணிகள் மேம்பாடு செய்வது அவசியம் ஆகும்.இப்பணியினை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 240 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 27

**சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன் கீழ் நகராட்சி பகுதியில் பயன்பாட்டில் உள்ள பொதுக் கழிப்பறைகள் சுகாதார முறையில் பொதுமக்கள் பயன்படுத்துவதற்க்கு தேவைப்படும் Harpic, Phenyl, Broom Stick, Mob, Soap, Towel, Odonil, Dustbins ஆகிய பொருட்கள்**

**வாங்குவதற்க்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**
**அலுவலககுறிப்பு;**

1. **நகர்மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொதுசுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண்.2570/2022/எச்1)

**தீர்மானம் எண் : 241 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 28

**சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன் கீழ் நகராட்சி பகுதியில் பயன்பாட்டில் உள்ள பொதுக் கழிப்பறைகள் மற்றும் சமுதாய கழிப்பறைகளை பயன்படுத்துவோரின் கருத்தை தெரிவிக்க QR Code பொறுத்த நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்:31420/2022/தூ.இ.தி2 நாள்:17.11.2022 தெரிவிக்கப்பட்டுள்ளது. சத்தியமங்கலம் நகராட்சியில் 26 சமுதாய கழிப்பறைகள் மற்றும் இரண்டு 2 பொது கழிப்பறைகள் பயன்பாட்டில் உள்ளன. 28 பைபர் பிளேட்கள் பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ. 30,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**

அலுவலககுறிப்பு;

1. **நகர்மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொதுசுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். 2555/2022/எச்.1)**

**தீர்மானம் எண் : 242 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

பொருள் : 29

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மற்றும் மராமத்து பணிகள் செய்து தருமாறு பொதுசுகாதார பிரிவு சுகாதார அலுவலரின் குறிப்பில் தெரிவித்துள்ளார். அவசர அவசியம் கருதி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 243 அனுமதிக்கப்பட்டது. நாள் 28.11.22**

நாள் : 25.10.2022

**நகர்மன்ற தலைவர்,**
**சத்தியமங்கலம் நகராட்சி.**